

கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் தொகுதி திருக்கோவிலூர் ஒன்றியம் வீரட்டக்கரம் கிராமத்தில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி தி.மு.க. வேட்பாளர் மலையரசனுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்குச் கேட்டு வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ பேசினார். அருகில் தி.மு.க. வேட்பாளர் மலையரசன் மற்றும் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் அய்யனார் ஆகியோர் உள்ளனர்.



சிதம்பரம் மக்களவைத் தொகுதியில், இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் வெற்றி வேட்பாளர் எழுச்சி தமிழர் தொல்.திருமாவளவன் , தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திருமானூர் ஒன்றியம் வாரணவாசி, கீழப்பழுவூர் மேலப்பழுவூர், பளிங்காநத்தம், சன்னாவூர், விளாகம், செம்பியக்குடி, குலமாணிக்கம், புதுக்கோட்டை, திருமழப்பாடி, கண்ராதித்தம், இலந்தைக்கூடம், கோவில் எசனை, வெங்கனூர், கரைவெட்டி பரதூர், கீழகாவட்டாங்குறிச்சி, பாளையப்பாடி, அன்னிமங்கலம், காரைப்பாக்கம், மஞ்சமேடு,திருமானூர்,திருவெங்கனூர், விழுப்பணங்குறிச்சி, சுள்ளங்குடி, உள்ளிட 38 கிராமங்களில் வீதி வீதியாக அமைச்சர் சா.சி.சிவசங்கர், வெற்றி வேட்பாளர் எழுச்சி தமிழர் தொல்.திருமாவளவன் ஆகியோர் தீவிர வாக்கு சேகரித்தார்கள். உடன் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, அரியலூர் சட்டமன்ற தேர்தல் பொறுப்பாளர் கவிஞர் சல்மா, காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் சங்கர், ஒன்றிய கழக செயலாளர்கள் இரா.கென்னடி, ரெ.அசோகசக்ரவர்த்தி, மாவட்ட துணை செயலாளர் லதாபாலு மற்றும் இந்தியா கூட்டணிக் கட்சிகளின் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்துக் கட்சி தோழர்கள் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலையில் வேட்பாளர்கள் எம்.எஸ்.தரணிவேந்தன் - சி.என்.அண்ணாதுரையை ஆதரித்து

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தேர்தல் பிரச்சாரம்!

## விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் செஞ்சி மஸ்தான் அறிக்கை!



விழுப்புரம், ஏப் 3 - விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் செஞ்சி மஸ்தான் அறிக்கை வருமாறு:

ஆரணி திருவண்ணாமலை நாடாளுமன்றத் தொகுதி இந்தியா கூட்டணியின்கழக வேட்பாளர்கள் எம். எஸ். தரணிவேந்தன்,சி.என்.அண்ணாதுரை ஆகியோரை ஆதரித்து மாபெரும் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் இன்று மாலை 5.00 மணிக்கு திருவண்ணாமலை மாவட்டம் கீழ் பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதி சோ காட்டுக்குளத்தில்நடைபெறுகிறது.

பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ. வேலு தலைமையில் நடைபெறும் மாபெரும் தேர்தல் பிரச்சார கூட்டத்தில்தமிழ்நாடு முதலமைச்சரும் கழக தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு கழக வேட்பாளர்களை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்து சிறப்புரை ஆற்றுகிறார்.

கூட்டத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி, மைலம், திண்டிவனம் தொகுதியில் உள்ள மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், நிர்வாகிகள், ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள் அனைத்து அணி பொறுப்பாளர்கள் சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் பாக முகவர்கள்என பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட நிர்வாகிகள் பங்கேற்று கூட்டத்தை சிறப்பிக்க வேண்டு மென விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் செஞ்சி மஸ்தான் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றவுடன்

# மடத்துக்குளத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க நடவடிக்கை!

## கழக வேட்பாளர் கே.ஈஸ்வரசாமி வாக்குறுதி!

திருப்பூர், ஏப். 3 - நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றவுடன் மடத்துக்குளத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்தியா கூட்டணியின் பொள்ளாச்சி நாடாளுமன்ற கழக வேட்பாளர் கே.ஈஸ்வரசாமி வாக்குறுதி அளித்துள்ளார்.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்திய கூட்டணியின் பொள்ளாச்சி நாடாளுமன்ற தொகுதி கழக வேட்பாளர் கே.ஈஸ்வரசாமி மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மடத்துக்குளம் கிழக்கு ஒன்றியம், மயிலாபுரம், மடத்தூர், ருத்ராபாளையம், கொழுமம், குமரலிங்கம், பாப்பான்குளம், மடத்துக்குளம், கிருஷ்ணாபுரம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களுக்கு சென்று உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார். இதில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், கழக பொறியாளர் அணி துணை செயலாளர் கு.சண்முகசுந்தரம், மாவட்ட அவைத்தலைவர், மடத்துக்கும் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராம கிருஷ்ணன், பொருளாளர் கே.எம்.முபாரக் அலி, ஒன்றிய கழக செயலாளர் சாகுல் அமீது, பேரூர் கழக சொயலாளர் சாதிக் அலி, ஒன்றியக்குழு பெருந்தலைவர் காவ்யா ஐயப்பன். குமரலிங்கம் பேரூராட்சி தலைவர் ஷர்மிளா பானு, கூட்டணி கட்சி நிர்வாகிகள் ராஜேஸ், கமலக்கண்ணன், வீரப்பன், வடிவேல், மோகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கழக வேட்பாளர் கே.ஈஸ்வரசாமி பேசியதாவது : மடத்துக்குளம் ஒன்றியத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ஒன்றிய துணைத் தலைவராக பணியாற்றிய போது கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் மூலம் மூலம் பல்வேறு நலத்திப் பணிகளை செய்துள்ளோம். இந்த தேர்தல் பிரதமர் மோடியின் ஆட்சியை வீட்டிற்கு அனுப்பும் தேர்தல். 100 நாள் வேலைத் திட்டத்தில் ஒன்றிய அரசு கடந்த நான்கு மாதமாக எந்தவித பணிகளையும் செய்யால் ஏழை மக்களை வஞ்சிக்கிறது. எனவே, தேர்தல் வெற்றிக்கு பிறகு திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையின்படி 100 நாள் வேலைத் திட்டத்தை 150 நாட்களாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கியது கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், ஆனால் மோடி ஆட்சி தமிழக மக்களை புறக்கணிக்கும் ஆட்சி ஆகவே அவர்களின் ஆட்சியை அகற்றி கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கை காட்டும் நபரை பிரதமராக்க தமிழகத்தில் அனைத்து தொகுதிகளிலும், எதிர்க் கட்சி வேட்பாளர்களை டெபாசிட் இழக்கும் வகையில் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும். நான் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டவுடன் மடத்துக்குளத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்கவும், மடத்துக்குளம் ரயில் நிலையத்தில் கூடுதல் ரயில்கள் நின்று செல்லவும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் விடுபட்டு உள்ளவர்களுக்கு மகளிர் உரிமைத் தொகை வழங்க நடவடிக்கை எடுப்பதுடன், தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் மக்களுக்கு தேவையான அனைத்து மக்கள் நல பணிகளும் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி கூறுகிறேன் என்று வாக்குறுதி அளித்தார்.

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, தேர்தல் பிரச்சாரம்!

(திருத்தப்பட்டது)

**தலைமைக் கழகம் அறிவிப்பு**



2024 ஏப்ரல்-19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, அவர்கள் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|
| 04.04.2024(வியாழக் கிழமை) | மதுரை<br>தேனி |
| 08.04.2024 (திங்கட் கிழமை) | சென்னை தெற்கு |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை-18.
29.03.2024

தலைமைக் கழகம்,
தி.மு.க.

### மீண்டும் பிரதமர் மோடி ஆட்சி தொடர்ந்தால்

# அரசியலமைப்புச் சட்டத்திற்கு பேராபத்து வந்துவிடும்!

## திண்டிவனம் தேர்தல் பிரச்சாரத்தில் தொல்.திருமாவளவன் எச்சரிக்கை!



திண்டிவனம், ஏப் 3 - விழுப்புரம் வடக்கு மாவட்டம் விழுப்புரம் நாடாளுமன்றம் ( தனி) தொகுதியில்இந்தியா கூட்டணி சார்பில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின்சார்பில் போட்டியிடும் வேட்பாளர் துரை ரவிக்குமாரை ஆதரித்து திண்டிவனம் தொகுதிதிண்டிவனம் மேம்பாலத்தின் அருகில் அக்கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் பானை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

திண்டிவனம் தொகுதிக்கு வருகை தந்த விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவனைசிறுபான்மையினர்நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் சால்வை அணிவித்து வரவேற்றார்.

தொடர்ந்துவிடுதலை சிறுத்தை கட்சியின் வேட்பாளர் துரை ரவிக்குமாருக்கு பானை சின்னத்திற்கு வாக்கு சேகரித்துபேசிய அக் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன்

தி.மு.க. தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு போட்டியிட இரண்டு தொகுதிகளை ஒதுக்கி போட்டியிட்டு வெற்றி பெற்று தேர்தல் அங்கீகாரம் பெற வேண்டும் என வாழ்த்தி அனுப்பியுள்ளார்.

அந்த வகையில் விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் வேட்பாளர் துரைரவிக்குமார் கடந்த முறையை விட இந்த முறை மூன்று மடங்கு வித்தியாசத்தில் சுமார் 4 1/2 லட்சம் வாக்குகள் பெற்று வெற்றி பெற வேண்டும்என்ன தெரிவித்து தொல் திருமாவளவன் இந்தியாவில் உள்ள விவசாயிகள், தொழிலாளர்கள், நெசவாளர்கள், சிறுகுறு தொழில் செய்பவர் கள்வேலை வாய்ப்பை இழந்து ஆபத்தில் உள்ளனர் .

ஜி.எஸ்.டி. விதிப்பால் விலைவாசியை கட்டுப்படுத்தவில்லை கடந்த 10 ஆண்டுகளில் 2 கோடிஇளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என தெரிவித்த மோடி அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கவில்லை வெளிநாடுகளில் பதிக்க வைக்கப்பட்டுள்ள லட்சக் கணக்கான கருப்பு பணத்தை மீட்டு இந்தியாவில் உள்ள ஏழை மக்களின் வங்கிக் கணக்கில் செலுத்துவேன் என்று சொன்னார் மோடி செய்யவில்லை.

ஆனால் இந்தியாவில் வளர்ச்சி அடைந்தவர்கள் இரண்டு பேர்அதானி அம்பானி, அயல்நாட்டுகளில் போதை மாத்திரைகளை கப்பல்கள், விமானங்கள் மூலமாகவும் இந்தியாவில் இறக்கி போதை பொருட்களைகிராமப் பகுதியில் கொண்டு சென்று இளைஞர்களிடம் விற்கப்படுகின்றன இளைஞர்களை போதைகளுக்கு அடிமையாகியஆட்சி பி.ஜே.பி. ஆட்சி என குற்றம் சாட்டியதொல் திருமாவளவன் மீண்டும் மோடி ஆட்சி தொடர்ந்தால்புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர்வகுத்தலித்த அரசியலமைப்புச் சட்டத்திற்கு பேர் ஆபத்து என்றும் அதை தூக்கி எறிந்து விடுவார்கள் அதை நீர்த்துப்போக செய்வார்கள் என வேதனையுடன் தெரிவித்த தொல் திருமாவளவன் டாக்டர் அம்பேத்கர் வகுத்தலித்த அரசியலமைப்புச் சட்டத்தை பாதுகாக்க வேண்டும்பாசிசத்தை ஒழித்து ஜனநாயகத்தை காப்பாற்ற வேண்டும் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான இந்தியா கூட்டணி வெற்றி பெற வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

முன்னதாக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான்பேசுகையில்:

பாசிச பா.ஜ.க. ஆட்சியை அப்புறப்படுத்தவாக்காளர்கள் அனைவரும் சபதம் ஏற்று பாஜக ஆட்சியை அப்புறப்படுத்த விழுப்புரம் பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட அனைத்து வாக்காளர்களும் பானை சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என்றும்ஜாதி மதம் இல்லாத கட்சி மத்தியில் ஆட்சி செய்ய வேண்டுமானால் பிஜேபியை பொதுமக்கள் தூக்கி எறிய வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில் தி.மு.க. மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர், பொருளாளர் ரமணன் ,மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார்,ஒன்றிய பெருந்தலைவர்கள் சொக்கலிங்கம், தயாளன்,துணை சேர்மன் பழனி திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன் ,விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர்கள்திலீபன், மலைச்சாமி உள்ளிட்ட தோழமைக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நீலகிரி தொகுதியில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா .ராமச்சந்திரன் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு குக்கிராமங்களில் உள்ள இல்லங்களுக்கு நேரடியாகச் சென்று பிரச்சாரம் செய்யும் பொருட்டு கழக நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். உடன் மாவட்ட துணை செயலாளர் செல்வி பொ.லட்சுமி , குன்னூர் ஊராட்சி ஒன்றிய தலைவர் திருமதி . சுனிதா நேரு , குன்னூர் ஒன்றிய செயலாளர் பிரேம் , கோத்தகிரி ஒன்றியச் செயலாளர் நெல்லை கண்ணன் , கீழ் கோத்தகிரி ஒன்றிய செயலாளர் பீமன் , உதகை வடக்கு ஒன்றிய செயலாளர் காமராஜ் , மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



சேலம் நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் டி.எம். செல்வ கணபதி சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அம்மாபேட்டை காமராஜர் காலனி, உழவர்சந்தை, அம்பேத்கர் காலனி, பச்சப்பட்டி, அம்பாயிரம் சாவடி தெரு, குமரன் தெரு, நாராயண நகர் கிச்சிப்பாளையம் கஸ்தூரிபாய் தெரு, குகை பகுதி உட்பட 50 இடங்களில் வீதி, வீதியாக சென்று உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. பகுதி செயலாளர்கள் கே.டி. ஆர்.தனசேகரன், கேபிள் ராஜா, கே. ஜெய், மாநகர துணைச்செயலாளர். வி கணேசன், ஜெகதீஸ் மற்றும் கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் இருந்தனர்.



ஜனநாயகம் காத்திடும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் நீலகிரி மற்றும் திருப்பூர் தொகுதிகளில் 'இந்தியா' கூட்டணி சார்பில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் வரும் ஏப்ரல் 12 அன்று தேர்தல் பரப்புரை மேற்கொள்ள திருப்பூர் வருகை தரும் நிலையில், சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் திருப்பூர் வடக்கு மாநகர காவல் செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் உள்பட கழக மகளிர் அணியினர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து பலர் கொண்டனர்.